


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ ஏப்ரல். 22, 2022 சென்னை & புதுக்கோட்டை 5 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 197 ❖ ரூ.10

### மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான கோடநாடு எஸ்டேட்

# சூடுபிடிக்குது

## 2017-ல் இதே மாதம் நடந்த கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக அப்போது பெங்களூர் சிறையிலிருந்த சசிகலாவிடம் இப்போது தனிப்படை போலீசார் விசாரணை





சென்னை, ஏப். 22:

**கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விவகாரம் தொடர்பாக சென்னை தியாகராயநகரில் உள்ள வீட்டில் சசிகலாவிடம் 6 மணி நேரம் நேற்று விசாரணை நடத்திய தனிப்படை போலீஸார் வெள்ளிக்கிழமையான இன்று மீண்டும் விசாரணை நடத்தவுள்ளனர்.**

நீலகிரி மாவட்டம், கோடநாடு எஸ்டேட்டில் 2017 ஏப்.24-ல் கொள்ளை முயற்சி நடந்தது. இதில், கோடநாடு எஸ்டேட்டின் காவலாளி ஓம்பகதூர் கொல்லப்பட்டார். இதுதொடர்பாக சயான், வாளையாறு மனோஜ், சந்தோஷ்சாமி, தீபு, சதீசன், உதயகுமார், ஜிஜின் ராய், ஜம்சீர் அலி, மனோஜ் சாமி, குட்டி என்ற பிஜின் ஆகியோரை நீலகிரி மாவட்ட போலீஸார் கைது செய்தனர். இதில் முக்கிய குற்றவாளியான கனகராஜ் விபத்தில் உயிரிழந்தார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், கோடநாடு வழக்கு விவகாரம் தொடர்பான விசாரணை மீண்டும் தீவிரமடைந்தது. மேற்கு மண்டல ஐஜி சுதாகர், கோவை சரக டிஐஜி முத்துசாமி ஆகியோரது நேரடி மேற்பார்வையில் நீலகிரி மாவட்ட போலீஸார் அடங்கிய தனிப்படைகள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கிடையே, கோடநாடு வழக்கு தொடர்பாக உயிரிழந்த கனகராஜின் சகோதரர் தனபால், அவரது உறவினர் ரமேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக தனிப்படை போலீஸார் தங்களது விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். இவ்வழக்கு தொடர்பாக கோடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் உறவினரும், ஜெயா தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர்களில் ஒருவரான விவேக் ஜெயராமன், கோவையைச் சேர்ந்த அதிமுக முன்னாள் எம்எல்ஏ ஆறுக்குட்டி, அவரது மகன், உறவினர் மகன், நேர்முக உதவியாளர் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தினர். மேலும், இவ்வழக்கில் முன்னரே கைது செய்யப்பட்ட நபர்களிடமும் விசாரணை நடத்தினர். இதுவரை கோடநாடு வழக்கு தொடர்பாக 200-க்கும் மேற்பட்டோரிடம் போலீஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு விவகாரம் தொடர்பாக சென்னை தியாகராயநகரில் உள்ள சசிகலாவிடம் மேற்கு மண்டலகாவல்துறைஐ.ஜி. சுதாகர் தலைமையிலான தனிப்படை நேற்று விசாரணை நடத்தியது. இந்தத் தனிப்படையில் நீலகிரி எஸ்.பி. ஆஷிஷ் ராவத், ஏடிஎஸ்பி கிருஷ்ணமூர்த்தி, டிஎஸ்பி சந்திரசேகரன் மற்றும் பெண் போலீஸார் ஆகியோர் உடனிருந்தனர். ஏற்கெனவே இந்த வழக்கில் தொடர்புடைய 217 பேரிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ள நிலையில், சென்னை வந்த தனிப்படை போலீஸார், சசிகலாவின் வீட்டில் நேற்று காலை 11 மணிக்கு விசாரணையைத் தொடங்கினர். பின்னர், மதிய உணவு இடைவேளைக்குப் பின் மீண்டும் விசாரணைத் தொடர்ந்து நடத்தப்பட்டது. விசாரணையில் கோடநாடு எஸ்டேட்டில் காணாமல் போன நிலப்பத்திரங்கள் சென்னை ஹோட்டலில் கிடைத்தது எப்படி என்பது உள்ளிட்ட நூறு கேள்விகளை சசிகலாவிடம் கேட்க தனிப்படை போலீஸார் திட்டமிட்டிருந்தனர். குறிப்பாக, கொலை, கொள்ளைச் சம்பவம் குறித்து உங்களுக்கு முதலில் தகவல் தெரிவித்தது யார்? நடராஜன் தொடர்பான கேள்விகள் அதில் இடம்பெற்றிருந்தன. இந்த விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சசிகலா முழு ஒத்துழைப்பு வழங்கியதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த வழக்கு தொடர்பாக அவர் அளித்த வாக்குமூலங்கள் அனைத்து வீடியோப் பதிவாகவும், எழுத்துபூர்வமாகவும் பதிவு செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கோடநாடு வழக்கு தொடர்பான கூடுதல் தகவல்களைப் பெற சசிகலாவிடம் விசாரணை நடத்த போலீஸார் முடிவு செய்தனர். கோடநாடு எஸ்டேட்டின் உரிமையாளர்களில் ஒருவர் சசிகலா என்பதால், எஸ்டேட் வளாகத்துக்குள் உள்ள பொருட்கள் குறித்து ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட சிலருக்கே தெரியும். எனவே, கோடநாடு எஸ்டேட் வளாகத்துக்குள் என்னென்ன பொருட்கள் இருந்தன? அதில் இருந்து கொள்ளை சம்பவத்துக்கு பிறகு காணாமல் போன பொருட்கள் என்னென்ன என்பன குறித்து சசிகலாவிடம் விசாரித்து தகவல்களைப் பெற போலீஸார் திட்டமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கோடநாடு கொலை கொள்ளை வழக்கு தொடர்பாக சசிகலாவிடம் நேற்று 6 மணிநேரத்திற்கும் மேலான விசாரணை முடிந்த நிலையில், இன்று காலை 10 மணிக்கு தனிப்படை போலீஸார் மீண்டும் விசாரணை நடத்தவுள்ளனர்.



சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திருக்குறள் குறளோவியப் போட்டியில் வெற்றி பெற்ற சென்னையைச் சார்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் த.மனோதங்கராஜ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ஐ.லியோனி, மேலாண்மை இயக்குநர் து.மணிகண்டன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், திரைப்பட நடிகர் சிவகுமார் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் நான்கு மண்டலங்களில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும்

### சட்டசபையில் முதல்வர் அறிவிப்பு



சென்னை, ஏப். 22:

சென்னைக்கு அருகே பிரமாண்ட விளையாட்டு நகரம் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் நேற்று உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுமேம்பாட்டு துறை தொடர்பான பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்ல அரசு முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும், இதற்காக நான்கு மண்டலங்களில் தலா ஒன்று வீதம், 4 ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். மேலும் ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம், 25 கோடி ரூபாய் செலவில் செயல் படுத்த ப்படும் எனவும் முதல மைச்சர் அறிவித்துள்ளார்.

அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளிலும் தலாமூன்று கோடி ரூபாய் செலவில் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வடசென்னையில் 10கோடி ரூபாய் செலவில், நவீன தொழில்நுட்பங்களோடு கூடிய குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் அமைக்கப்படும் எனவும், பாரம்பரிய விளையாட்டான சிலம்பத்தை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். ஏடிபி சென்னை ஓபன் டென்னிஸ் தொடர் மற்றும் பீச் ஒலிம்பிக்ஸ் தொடரை மீண்டும் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக முதல்வர் கூறினார்.

மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கென தனியாகபிரமாண்டமான மைதானம் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழ்நாட்டில் நடைபெற உள்ளதால், விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக வளர்ந்து சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.




## வைத்தீஸ்வரன் கோவில் பக்தர்களுக்கு சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்களை புதுக்கோட்டையில் நடிகை வழங்கினார்



புதுக்கோட்டை, ஏப். 22:

புதுக்கோட்டையில் நடிகை கௌதமி வைத்தீஸ்வரன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டிகளை நேற்று வழங்கினார்.

பாஜக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்று நடைபாதையாக செட்டிநாடு கிராமங்களிலிருந்து விரதமிருந்து பாதயாத்திரையாக வருடந்தோறும் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு பக்தர்கள் செல்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் பக்தர்கள் பாதயாத்திரை செல்கின்றனர். பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு புதுக்கோட்டை நகர எல்லையில் உள்ள மச்சுவாடி பகுதியில் மாவட்ட பாஜக தலைவர் செல்வ அழகப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நடிகை கௌதமி பங்கேற்று நடைபாதை சென்ற பக்தர்களை வரவேற்று சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்களை வணங்கி உபசரித்தார்.


இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பாஜக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் பங்கேற்றனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்











| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,946 | Rs.5,345 |

## வரலாற்றில் இன்று



1856 ஆத்திரேலியாவில் மெல்பேர்ண் நகரில் எட்டு-மணி நேர வேலையைக் கோரி கட்டடத் தொழிலாளிகள் நாடாளுமன்றத்திற்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றார்கள்.

1898 எசுப்பானிய அமெரிக்கப் போர்: அமெரிக்கக் கடற்படை கியூபாவின் துறைமுகங்கள் மீது முற்றுகையிட்டது. அமெரிக்க சட்டமன்றம் ஏப்ரல் 25 இல் போர்ப் பிரகடனம் அறிவித்திருந்தாலும், போர் நிலை இந்நாளில் இருந்தே ஆரம்பித்தது.

1926 நான்கு சியா இமாம்களின் கல்லறைகள் அடங்கிய அல்-பாக்கி இடுகாடு (இன்றைய சவூதி அரேபியாவில்) வகாபுகளினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

1944 பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

1945 இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் சோவியத் படைகள் ஜெர்மனியின் உயர் தலைமைப்பீடத்தைத் தாக்கினர்.

1960 பிரசிலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.

1964 டிரான்சிட்-5பிஎன் என்ற செயற்கைக்கோள் சுற்றுவட்டத்தில் இணைய முடியாமல் வளி மண்டலத்தினுள் மீளத் திரும்பியது. 0.95கிகி கதிரியக்க புளுட்டோனியம் பரவலாக சிதறியது.

1966 ராஸ்தஃபாரை: எத்தியோப்பியாவின் பேரரசர் முதலாம் ஹைலி செலாசி ஜமேக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார்.

1967 கிரேக்கத்தில் பொதுத்தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கையில் இராணுவத் தளபதி ஜோர்ஜியோசு பப்படபவுலோசு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி அடுத்த ஏழாண்டுகளுக்கு பதவியில் இருந்தார்.

1975 வியட்நாம் போர்: தென் வியட்நாம் அரசுத் தலைவர் நியூவென் வான் தியூ சாய்கோனை விட்டு வெளியேறினார்.

1987 இலங்கையின் தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 106 பேர் கொல்லப்பட்டனர்.

1989 1989 தியனன்மென் சதுக்கம் எதிர்ப்புப் போராட்டங்கள்: பெய்ஜிங் நகரில் தியனன்மென் சதுக்கத்தில் கிட்டத்தட்ட 100,000 மாணவர்கள் சீர்திருத்தத் தலைவர் ஹீ யாபாங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டனர்.

## மௌண்ட் சீயோன் மெட்ரிக் பள்ளியன்னிரெண்டாம் வகுப்புமாணவர்களுக்கான பிரிவு உபச்சாரவிழா



புதுக்கோட்டை , ஏப்.22-

2021- 2022 ஆம் ஆண்டுபன்னிரண்டாம் வகுப்பு மாணவர் களுக்கான 28வது பிரிவு உபச்சாரவிழா மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சியானது இறைவழிபாட்டுடனும், வேதவசனவாசிப்புடனும் இனிதேதொடங்கியது.

மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதன், துணைத்தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் ஆகியோர் சிறப்புவிருந்தினர் மேரி ஜெசி சிஎஸ்ஐ கிறிஸ்து ராஜா தேவாலயம் திருச்சபை மூப்பருக்கு பொன்னாடை அணிவித்துநினைவுப்பரிசினை வழங்கினார்கள். கல்வி ஒருங்கிணைப்பாளர் குமரேஷ் புத்தகம் பரிசளித்தார். பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் பள்ளிவாழ்க்கை அனுபவங்களை தமிழ் மற்றும் ஆங்கிலம் வாயிலாக சொற்பொழிவுஆற்றினர். பள்ளிவாழ்க்கையில் இருந்து விடை பெற்றுச் செல்லும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்காக, ஆசிரியர்கள் குழுவாக பாடல் பாடினார்கள். பள்ளித்தலைவர் ஜோனத்தன் தலைமையில் சீயோன் பாடல் குழுவினர்களின் பாடல் பாடப்பட்டது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் பேசுகையில், பள்ளிவாழ்க்கைக்குப் பிறகு அன்றாடவாழ்க்கையில்எடுக்கும் முடிவு புத்திசாலித்தனமாக இருத்தல் வேண்டும், என்றுமாணவர்களுக்கு வலியுறுத்தினார். மௌண்ட் சீயோன் பள்ளிகளின் துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் பேசுகையில் மாணவர்களுக்கு தற்போதைய தலை முறைக்குத் தேவையான தார்மீக மதிப்புகள் குறித்தும், மாணவர்களை மதுவிலக்கு உறுதிமொழியினை எடுக்கவும் வலியுறுத்திப் பேசினார். மாணவர்கள் ஆசிரியர்களுக்கு நினைவு பரிசினைவழங்கினார்கள். இதனை தொடர்ந்து மாணவர்களின் திறமைகள் பல்வேறுகலைநிகழ்ச்சிகள் வாயிலாக அரங்கேற்றப்பட்டன.

## தஞ்சாவூரில் வார்டு பொதுமக்களுக்கு கட்டணமில்லா சேவை வழங்கும் கவுன்சிலர்– பொதுமக்கள் பாராட்டு

தஞ்சாவூர், ஏப்.22-

தஞ்சாவூர் மாநகராட்சியில் 51 வார்டுகள் உள்ளன, இதில் 3வது வார்டில் மதிமுகவை சேர்ந்த சுகந்தி துரைசிங்கம் திமுக கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார், இந்நிலையில் தனது வார்டு பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் கட்டணமில்லா சேவை வசதியினை தொடங்கி உள்ளார்,தனது வார்டு பகுதியில் நடைபெறும் துக்க நிகழ்வுகளுக்கு இறுதி ஊர்வல வண்டியும், குளிர்சாதனப் பெட்டியும் கட்டணம் இல்லாமல் தனது சொந்த செலவில் செய்து தருகிறார்,இந்த சேவையினை தெரியப்படுத்தும் வகையில் வார்டு பகுதிகளில் ஆங்காங்கே ப்ளக்ஸ்




வைத்து பொதுமக்கள் இதை பயன்படுத்தி கொள்ளவும் என்றுகேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில்கடந்த14ஆம் தேதி தஞ்சை மாநகராட்சிக்கு உட்பட்ட சாந்திவனம், ராஜாகோரி, மாரிகுளம் ஆகிய மயானங்களில் பொதுமக்கள் இறந்தவர்களின் உடலை தகனம் செய்ய கட்டணமில்லா சேவையினை மாநகராட்சி மேயர் ராமநாதன் துணை மேயர் அஞ்சுகம் உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர், இதனையடுத்து 3வது வார்டு கவுன்சிலர் சுகந்தி, மதிமுக மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன், ஒப்புதல் பெற்று இந்த கட்டணமில்லா சேவையினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது, துக்க நிகழ்வுகளுக்கு சுமார் ரூ.20 ஆயிரம் வரை செலவழிக்கப்பட்ட நிலையில் இச்சேவை பொதுமக்களுக்கு உதவியாக இருக்கும் என்று பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.






### தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பகுதியில்

## இரயில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கவலியுறுத்தி எம்.பி யிடம் மனு



தென்காசி, ஏப்.22-

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் கிருஷ்ணாபுரம், பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பாக, தலைமை காங்கிரஸ் கட்சி கொறடா மாணிக்தாகூர் எ.பி.யிடம் தென்னக ரயில்வேயில் பயணிகள் வசதிக்காக திருநெல்வேலியில் இருந்து தென்காசி வழியாக தாம்பரத்திற்கும், மறு மார்க்கமாக தாம்பரத்திலிருந்து மதுரை, தென்காசி, திருநெல்வேலி வரை இயக்கும் கோடைகால சிறப்பு வாராந்திர ரயில் 06004-06003, ஜூன் மாதம் இறுதிவரை இயக்கப்பட உள்ளது. ஆகையால் கடையநல்லூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஆன்மீகப்பயணம், மெக்கா, மதினா, ராமேஸ்வரம், காசி, போன்ற திருத்தலங்களுக்கு செல்லும் ஆன்மிக பயணிகளும் தொழில் துறையில் சிறந்து விளங்கும் பகுதியாகவும் வியாபாரிகள் விவசாயிகள் விளை பொருட்களை எடுத்துச் செல்லும் வகையில் சிறந்து விளங்கும் எங்கள் பகுதியில் வாராந்திர பயணிகள் ரயில் கடையநல்லூரில் நின்று செல்லுமாறு மாணிக்தாகூரிடம் மனுவாக கொடுக்கப்பட்டது.

தென்னக ரயில்வே கோட்ட மேலாளருக்கும் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளோம். தாங்களும் சிபாரிசு செய்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி கிருஷ்ணாபுரம் பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பாக வேண்டி வலியுறுத்தினர். இந்நிகழ்ச்சியில் நகர காங்கிரஸ் தலைவர் சமுத்திரம் கடையநல்லூர், மாவட்ட துணைத்தலைவர் சர்புதீன், மாவட்ட வர்த்தக காங்கிரஸ் துணைத் தலைவர் முகமது ரபி, இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் எஸ் ஆர் எஸ். ரமேஷ், நகர காங்கிரஸ் முஹம்மது அபுதாஹிர், நகர பொருளாளர் மஸ்தான், மாவட்ட ஒபிசி தலைவர், ஆகியோர் எம் பி யிடம் கடையநல்லூர் காங்கிரஸ் கமிட்டி சார்பாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது.

### கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பில்

## மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டி

புதுக்கோட்டை ,ஏப்.22-

கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டுப்போட்டிகள் புதுக் கோட்டை மாவட்ட விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது.

புதுக்கோட்டை கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளி விளையாட்டுப்



போட்டிகளை சங்கத்தின் தலைவர் ரவிக்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். விழாவிற்கு மாவட்ட விளையாட்டு அலுவலர்குமரன்தலைமை வகித்தார்.பயிற்சியாளர்கள் ராஜாமணி, சண்முக பிரியன், செந்தில் மற்றும் ரோட்டரி துணை ஆளுநர்கள் பிரசாத், முருகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## "இளையராஜா ஒன்றிணைப்பார்" மதுரையில் பரபரக்கும் பாஜக போஸ்டர்கள்

மதுரை , ஏப்.22-

அண்ணல் அம்பேத்கர், இளையராஜா, பிரதமர் மோடி ஆகியோரை இணைத்து மதுரை மாநகர் பாஜகவினர் சார்பில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களால் மீண்டும் பரபரப்பு தொற்றிக்கொண்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கரையும், பிரதமர் மோடியையும் ஒப்பிட்டு இளையராஜா பேசியது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், மூவரின் புகைப்படங்களையும் இணைத்து "இளையராஜா நம்மை ஒன்றிணைப்பார்" என மதுரை மாநகர் பாஜகவினர்போஸ்டர்களை ஒட்டியுள்ளனர்.

புளூகிராஃப்ட்டிஜிட்டல் ஃபவுண் டேஷன் என்ற நிறுவனம் வெளியிட்டிருந்த 'மோடியும் அம்பேத்கரும்' என்ற புத்தகத்தில் இசையமைப்பாளர் இளையராஜா எழுதிய முன்னுரையில்,




"மோடிக்கும் அம்பேத்கருக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை இருக்கிறது. இருவருமே ஏழ்மை,ஒடுக்குமுறைகளை அனுபவித்தவர்கள். இருவருமே இந்தியாவின் மீது பெரிய கனவுகளைக் கண்டவர்கள்'' என குறிப்பிட்டிருந்தார்.

இது சமூக வலைத்தளங்களில் பெரும் சர்ச்சைக்கு உள்ளான நிலையில், அரசியல், சினிமா வட்டாரங்களில் இளையராஜாவுக்கு ஆதரவாகவும்,எதிராகவும் பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன. இந்நிலையில், அண்ணல் அம்பேத்கர், இளையராஜா, பிரதமர் மோடி ஆகியோரை இணைத்து மதுரை மாநகர் பாஜகவினர் சார்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில், அண்ணல் அம்பேத்கர்மற்றும்பிரதமர் மோடியின் கரங்களை பிடித்து இருவரையும் இளையராஜாஇணைப்பது போல் வடிவமைத்து உள்ளனர்.மேலும், "மதம், சாதி, மொழி கடந்து இசை நம்மை ஒன்றிணைக்கும். இசைஞானி இளையராஜாவும் கூட" எனும் வாசகங்களும் மாநிலத் தலைவர் அண்ணாமலைமுன்னாள் எம்எல்ஏ சரவணன் உள்ளிட்டோரின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

## மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை

சென்னை , ஏப்.22-

மாற்றுத் திறனாளிகளுக்கான நியாயமான உதவித்தொகையை நிர்ணயித்துவழங்கக்கோரி நேத்ரோதயா என்ற அமைப்பு 2018ல் வழக்கு தொடர்ந்திருந்தது.

கடந்த முறை அந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்குவந்தபோது, உதவித்தொகையை அதிகரித்து வழங்கும் விஷயத்தில் சமூக நலத்துறை செயலாளர் அக்கறையுடன் செயல்படவில்லை என்றும், குறைவான உதவித்தொகை வழங்கி அவமானப்படுத்த வேண்டாமென கருத்து தெரிவித்திருந்தனர். இதுகுறித்துசமூகநலத்துறை முதன்மை செயலாளர் நேரில் ஆஜராகி விளக்கமளிக்கும்படி உத்தரவிட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு தரப்பில், பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு பாகுபாடு காட்டப்படவில்லை எனவும், நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது. 21 வகையான மாற்றுத் திறனாளிகளில் 5 வகையினர் வேலைக்கு சென்று வருமானம் ஈட்ட முடியாதவர்கள்என்பதால் அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 2000 ரூபாய் வீதம் வழங்கப்படுவதாகவும், மற்ற அனைத்து வகையினருக்கும் 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருவதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

உதவித் தொகை மட்டுமல்லாமல் போக்குவரத்தில் சலுகை, மருத்துவ உதவி, ரேசன் சலுகை உள்ளிட்டவற்றை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. சமூக நலத்துறை முதன்மை செயலாளர் ஆஜராகாத நிலையில், அவர் ஆஜராக விலக்கு அளிக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. அப்போது நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான வசதியானவாழ்க்கைகுறித்து நீதிமன்றம் கேட்கவில்லை என்றும், ஆனால் அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத்திற்கான அரசின் நடவடிக்கைகள் குறித்தே நீதிமன்றம் அறிய விரும்புவதாக தெரிவித்தனர்.

பின்னர் சமூக நலத்துறை முதன்மை செயலாளர் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்க மறுத்த நீதிபதிகள், அவர் ஆஜராகி நீதிமன்றத்திற்கு உதவ வேண்டும் என திட்டவட்டமாக தெரிவித்துவிட்டனர்.

உதவித்தொகையை உயர்த்தி வழங்குவது குறித்து குழு அமைத்து நடவடிக்கைமேற்கொள்ள அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூன் 8ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## மின் இணைப்பை துண்டித்த இன்ஜினியர் மீது சரமாரி தாக்குதல்... தெலங்கானாவில் பரபரப்பு


ஐதராபாத் , ஏப்.22-

2 ஆண்டுகளாக மின் கட்டணம் செலுத்தாததால் மின் இணைப்பை துண்டிக்க வந்த இன்ஜினியர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தெலங்கானாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்தவர் விஷால். இவர் தனது தாயாருடன் கர்வான் பகுதியில் வசித்து வருகிறார். விஷால் கடந்த 2 ஆண்டுகளாக மின் கட்டணம் செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கிடையே கர்வான் துணை மின் நிலையத்தில் பணிபுரியும் அதிகாரி விஜய குமார் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர், மின் கட்டணம் செலுத்தாதவர்களின் இணைப்பை துண்டிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

அந்த வகையில் விஷால் வீட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதையடுத்து, மின் வாரிய அலுவலகத்திற்கு திரும்பிய இன்ஜினியர் விஜய குமாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் உச்சகட்டத்தை அடைந்து, விஜயகுமாரை விஷால் தாக்கினார்.

இதுதொடர்பாக இன்ஜினியர் விஜயகுமார் அளித்த புகாரின்பேரில் விஷால் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விஷால் கடந்த 2 ஆண்டுகளாக மின் கட்டணம் செலுத்தவில்லை என்றும், இதற்கான தொகை



ரூ. 15 ஆயிரம் என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, மிகவும் பழமையான நூலகங்களில் ஒன்றான ஐதராபாத்தின் கிரந்தாலயா சமஸ்தாவில் கடந்த சில நாட்களாக மின்சார வசதி இல்லையென்று புகார்கள் எழுந்துள்ளன. நூலகங்களில் அடிப்படை வசதிகள் செய்யப்படாததால், தேர்வுக்கு தயாராகும் அரசுப் பணிக்கான விண்ணப்பதாரர்கள் சிரமப்படுகின்றனர்.

முறையான பராமரிப்பு இல்லாத 69 ஆண்டுகள் பழமையான வரலாற்று கட்டிடமாக இந்த நூலகம் இருந்து வருகிறது. இதனை அரசு தேர்வு ஆர்வலர்கள் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். நகரத்தின் பழமையான நூலகங்களில் ஒன்றான இது 1953 இல் நிறுவப்பட்டது. இங்கு ஆயிரக்கணக்கான புத்தகங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

சட்டம், மருத்துவம், வரலாறு மற்றும் அகராதிகள் பற்றிய குறிப்புப் புத்தகங்கள் தவிர, எம்ப்ளாய்மென்ட் நியூஸ், குழந்தைகள் புத்தகங்கள், இதழ்கள் மற்றும் நாளிதழ்கள், உருது, ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மராத்தி உள்ளிட்ட 17 மொழிகளில் பத்திரிக்கைகளும் இங்கு கிடைக்கின்றன. இந்நிலையில் இங்கு மின் வசதியை சீரமைத்து தர வேண்டும் என்று பொதுமக்களும் வாசகர்களும் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து மருத்துவமனைகளும் தூய்மை மருத்துவமனையாக மாற்ற விழிப்புணர்வு




திருவள்ளூர் , ஏப் .22:

தமிழ்நாடுமுதலமைச்சர் ஆணைக்கிணங்க, திருவள்ளூர்மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவ மனைகளும் தூய்மை மருத்துவம னையாக மாற்றும் நோக்கத்தில் ஏப்ரல் 1 முதல் 30 வரை பல்வேறு செயல்பாடுகள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தொடர்ந்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் வகையில் திருவள்ளூர் தலைமை தபால் அலுவலகத்திலிருந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனை வரை நடைபெற்ற "தூய்மை மருத்துவமனை விழிப்புணர்வுபேரணியை " மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டவர்களோடு கலந்துரையாடி தூய்மை மருத்துவமனை விழிப்புணர்வு குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.

உடன் திருவள்ளூர் அரசு மருத்துவமனை (ம) மருத்துவகல்லூரிமுதல்வர் அரசி ஸ்ரீவத்சன், அரசு மருத்துவமனை நிலைய மருத்துவ அலுவலர் ராஜ்குமார், புற்றுநோய் நுண்கதிர் சிறப்புமருத்துவர் கோபிகா ,என்.எச் .எம். ஒருங்கிணைப்பாளர் விஜயராஜ் , குழந்தை நல மருத்துவர் பிரபுசங்கர், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும்அரசுஅலுவலர்கள் உள்ளனர்

# போளிவாக்கம் ஸ்ரீ ஷண்முக நாயகன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா: திரளான பக்தர்கள் பங்கேற்பு



திருவள்ளூர், ஏப் .22:

திருவள்ளூர் அடுத்த போளிவாக்கம் கிராமத்தில்ஸ்ரீநித்யானந்த சுவாமிகள் சித்தர் குடிலில் அமைந்துள்ளஸ்ரீ ஷண்முக நாயகன்மற்றும் பதினெட்டு சித்தர்கள் ஞானிகள்ஆலயம் பகவத் கிருபையை முன்னிட்டும் நித்யானந்தம் சுவாமிகளின் அருளாசியோடும் சீடர்களுடைய முயற்சியினாலும், பக்தர்களின் பங்களிப்புடனும் புரணமைக்கப்பட்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நேற்று காலை விழா வெகு விமரிசையாக நடைப்பெற்றது . முன்னதாக கடந்த புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தேவதா அனுன்ஜை விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், மஹாலட்சுமி ஹோமம், கோ பூஜை, குரு பூஜை, யாகசாலை பூஜைகள் நடைப்பெற்றது.

விழாவின் முக்கிய நாளான நேற்று காலை 10.30 மணிக்கு கடம் புறப்பாடு விமான கும்பாபிஷேகம்,காலை 11.00 மணிக்கு ஷண்முக சுவாமிக்கு மஹா கும்பாபிஷேகம் மற்றும் சித்தர்கள் ஞானிகள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது.விழாவிற்கு போளிவாக்கம் சுற்று வட்டாரப்பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர்பக்தர்களுக்கு விபூதி , குங்குமம் அன்னதான பிரசாத விநியோகம், பகல் 12.00 மணிக்கு மஹா அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை சோடஸ உபச்சாரங்கள், பிற்பகல் 3.00 மணிக்கு வள்ளி தெய்வானை சமேத ஷண்முகருக்கு திருக்கல்யாணம் மற்றும் ஊஞ்சல் உற்சவம் நடைப்பெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பிரம்மாஸ்ரீ நித்யானந்தா ஸ்வாமிகள், சார்பாக பிரம்ம ஸ்ரீ ஸ்ரீனிவாசன்தலைமையில் சீடர்கள் செய்திருந்தனர்,

# ஆதனக்கோட்டை அருகே மணல் கடத்தலில் ஈடுபட்ட டிராக்டர் இயந்திரங்கள் பறிமுதல்: 3 பேர் கைது



**ஆதனக்கோட்டை, ஏப்.22–**

மணல் கடத்தலில் ஈடுபட்ட டிராக்டர்ஜேசிபி இயந்திரங்கள் பறிமுதல், மூன்று டிரைவர்கள் கைது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள வண்ணாரப் பட்டியில் இருந்து கொழுந்துவார்பட்டி செல்லும் சாலையில் பெருங்குளம் உள்ளது. இந்த குளத்தில் ஜேசிபி மற்றும்இரண்டு டிராக்டர் டிப்பர்களில்மண் அள்ளிக் கொண்டிருந்தனர். மண் அள்ளுவது பற்றிய ரகசிய தகவல் ஆதனக்கோட்டை காவல்துறையினருக்கு கிடைத்தது. விரைந்து சென்ற காவல்துறையினர் மணல் கடத்தலுக்கு பயன்படுத்திய டிராக்டர் டிப்பருடன் ஜேசிபியையும் பறிமுதல் செய்தனர்.

இந்த சம்பவத்தில் ஜேசிபிஓட்டுநர் முதுகுளம் தெற்கு தெருவை சேர்ந்த கோவிந்தசாமி மகன் முருகன் (40), குப்பையன்பட்டி தெற்கு தெருவை சேர்ந்த உடையப்பன் மகன் அன்பரசன் (35), ஆதனக்கோட்டை அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த முத்தையா மகன் இளங்கோ (50), ஆகியமூவர் மீதும் கந்தர்வக்கோட்டை இன்ஸ்பெக்டர் செந்தில்மாறன் பரிந்துரையின் பேரில் ஆதனக்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் ரவி வழக்கு பதிவு செய்து மூவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# குத்தாலம் அருகே கிளியனூர் ஊராட்சியில் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம்



குத்தாலம், ஏப்.22:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா கிளியனூர் ஊராட்சி ஒன்றிய அரசு மேல்நிலைப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம்சிறப்புமருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு ஊராட்சி மன்ற தலைவர் முஹம்மது ஹாலிதது தலைமை தாங்கினார். வட்டார மருத்துவ அலுவலர் கோபி, ஒன்றிய குழு உறுப்பினர் சுந்தரவல்லி ராஜேந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். குத்தாலம் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் அமிர்தகுமார்வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக சுகாதாரப்பணிகள்துணை இயக்குனர் குமரகுருபரன் கலந்துகொண்டு மருத்துவ முகாமை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மேலும் முகாமின் சிறப்புகள் குறித்து பேசினார்.இதில் மருத்துவ அலுவலர்கள் மதுமதி தலைமையில் மருத்துவர்கள் செவிலியர்கள் ,சுகாதார பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் ஈசிஜி, பொது மருத்துவம், மகளிர் குழந்தைகள் மருத்துவம், எலும்பு, காது, மூக்கு, தொண்டை பிரிவு, பல் பிரிவு, சித்தா, ஆயுர்வேதா, யுனானி, மற்றும் கண், ரத்தப் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகளை மேற்கொண்டனர். அங்கன்வாடி பணியாளர்கள் சார்பில் காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் கீரைகள் மற்றும் விளக்கப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் கொரோனா தடுப்பூசி முகாமும் நடந்தது. இதில் பொதுமக்கள் கலந்து கொண்டுபயனடைந்தனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com

# போக்குவரத்து காவலர்கள் இல்லாததால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்



வட சென்னை ஆர்கே நகர் தொகுதிக்குட்பட்ட மணலி விரைவு சாலையில் எழில்நகர் சந்திப்பில் காலை வேளையில் பள்ளி மற்றும் அலுவலக நேரம் என்பதால் அதிக அளவு வாகனங்கள் எழில் நகர் சந்திப்பில் குவிகின்றது இதனை ஒழுங்கு படுத்த ஒரு போக்குவரத்து காவலர் கூட இல்லாததால் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு கடுமையான போக்குவரத்து நெரிசல் தினந்தோறும் ஏற்படுகிறது.



அதிமுக கழக இணை ஒருங்கிணைப்பாளர்எடப்பாடி கே.பழனிச்சாமி அதிமுக கழக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் உத்தரவின் படி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அமைப்பு தேர்தல் மாதவரத்தில் நடைபெற்றது. இதில் கடலூர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எம்.சி. சம்பத். கழக புரட்சித்தலைவி பேரவை துணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பிஎஸ். அருள் இடம். திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் வி. மூர்த்தி வேட்பு மனு தாக்கல் செய்தார். இதில் அதிமுக கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்



மயிலடுதுறை மாவட்டம், குத்தாலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியில் நேற்று மாணவிகளுக்கு தயாரிக்கும் உணவுகளின் தரம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் இரா.லலிதா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்ஆய்வின்போது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.முத்தமிழ்செல்வன் உடன் இருந்தார்.

# சென்னையில் 184 கிலோ போதைப்பொருள் பறிமுதல்: 3 பேர் கைது

சென்னை, ஏப் .22:

சென்னை ஆர். கே.நகரில் 184 கிலோ போதைப்பொருள் மற்றும்மூலப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எந்த வகையான போதைப்பொருள் என்பதை கண்டறிய மூலப்பொருட்களின் மாதிரி ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊசிவடிவில்போதை பொருளை வைத்திருந்த சாகுல் அமீது, சுரேஷ், சௌகத் அலி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.



மதுரை வைகையாற்றில் இரண்டு வருடங்களுக்கு பிறகு பச்சை பட்டு உடுத்தி லட்சக்கணக்கான பக்தர்கள் உடன் வந்து ஆற்றில் இறங்கி அருள் பாழித்த கள்ளழகரை வீரா கன்ஸ்ட்ரக்சன் மேலாண்மை இயக்குநர் இளங்குமரன் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் இன்முகத்துடனும் பக்தியுடனும், வைகை ஆற்றில் வந்து இறங்கிய கள்ளழகரை வரவேற்றனர்.




# மேல்மருவத்தூர் ஊராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் செயல்படக்கூடிய திடக்கழிவு மேலாண்மை மத்திய குழு ஆய்வு



செங்கல்பட்டு , ஏப் .22:

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஒன்றியம்மேல்மருவத்தூர் ஊராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் செயல்படக்கூடிய திடக்கழிவு மேலாண்மை மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகள் சிறப்பான முறையில் இந்த ஊராட்சியில் செயல்படுத்தி வருவதால் முன்மாதிரி கிராமமாக திகழ்ந்து வருகிறது.

இந்ததிட்டப்பணிகளை மத்தியமாநில அதிகாரிகள் ஆய்வு செய்யும் நிகழ்ச்சி நடந்தது இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் தலைமை தாங்கினார் ஊராட்சி மன்ற துணை தலைவர் அகத்தியன் முன்னிலை வகித்தார் ஊராட்சி செயலர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் உதவி செயலர் மதன்லால் கலந்துகண்டு மன்ற உறுப்பினர்கள் சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரிடம் கலந்துரையாடினார் இதனைத் தொடர்ந்து ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் திரவ கழிவு மேலாண்மை பணிகள், தனிநபர் கழிவறை, உறிஞ்சி குழி, வீட்டுத்தோட்டம் நுண்ணுயிர் மேலாண்மை ஆகியவற்றை பார்வையிட்டு மரக்கன்று நட்டார்.

முழு சுகாதார மாநில ஒருங்கிணைப்பாளர் வினோத், உதவி திட்ட அலுவலர் அம்பிகாபதி, சித்தாமூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வீரமுத்து, ஞானப்பிரகாசம், அச்சிறுப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் சசிகலா, ஒன்றிய பொறியாளர் கனிமொழி வட்டார சுகாதார ஒருங்கிணைப் பாளர் சுரேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

## குண்டாறு காவிரி இணைப்பு திட்டத்தை

# உடனடியாக தொடங்க வேண்டும்: புதுக்கோட்டை மாவட்டம் மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் வலியுறுத்தல்



**புதுக்கோட்டை , ஏப் .22:**

குண்டாறு காவிரி இணைப்பு திட்டத்தை உடனடியாக தொடங்க வேண்டும் என புதுக்கோட்டை மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்ட மதிமுக மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. மதிமுக அரசியல் ஆலோசனைக்குழு உறுப்பினர் புலவர். அரங்க நெடுமாறன் தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் அரசி.ரெ.கருணாநிதி வரவேற்புரையாற்றினார், பொருளாளர் மாத்தூர் எஸ்.கே .கலியமூர்த்தி முன்னிலைவகித்தார். மதிமுக துணைப் பொதுச்செயலாளர் ஆடுதுறை இரா. முருகன்கலந்துகொண்டு கட்சியின் வளர்ச்சி செயல்பாடுகள் குறித்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பெட்ரோல் மற்றும்டீசல்விலையுர்வை மத்திய அரசு குறைக்க வேண்டும், குண்டாறு–காவிரி இணைப்பு திட்ட பணிகளை உடனடியாக தொடங்கி மாவட்டத்தின் வறட்சி நிலையை போக்க வேண்டும் எனவும் மதிமுக தலைமைக் கழக செயலாளர்.துரை வைகோ தலைமையில் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் கழகக் கொடிகள் ஏற்றப்பட வேண்டும். மறைந்த கரம்பக்குடி ஒன்றிய செயலாளர் சேதுமாதவன் படத்தை திறந்து வைக்க வரும் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோவிற்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நகர்புற உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற அனைவரையும் பாராட்டி நினைவு பரிசு வழங்கப்பட்டது.மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கே.ஏ.ஆரோக்கியசாமி, சுப்பையா, லதா. கருணாநிதி, வழக்கறிஞர் கா.சி.சிற்றரசு, வழக்கறிஞர் இராஜா. ஆதிமூலம், பொறியாளர் இரா. பாண்டியன் மதி.பிரபு மாவட்ட மாணவர் அணிசெயலாளர்,மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், விவசாய அணி அமைப்பாளர்கள், இலக்கிய அணி அமைப்பாளர்கள், தொண்டர்கள் கலந்துகொண்டனர் பொருளாளர் மாத்தூர் எஸ்.கே.கலியமூர்த்தி நன்றி யுரையாற்றினார்.

# பெரியபாளையத்தில் ஆன்லைன் ஆப் மூலம் லோன் கேட்டபோது விபரீதம்: பணத்தை இழந்த வாலிபர் தூக்கு போட்டு தற்கொலை



**ஊத்துக்கோட்டை, ஏப்22–**

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம், டாக்டர் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த வாலிபர் பிரசாந்த் (வயது 37) ஆவார்.தனியார் நிறுவன ஊழியரான இவருக்கு திருமணமாகி தனலட்சுமி வயது (வயது 28) என்ற மனைவியும்,ஒரு மகன்,ஒரு மகள் உள்ளனர்.

இந்நிலையில்,பிரசாந்த் குடும்ப செலவுக்காக ஆன்லைன் ஆப் மூலம் ரூ. 6லட்சம் கடனுதவி கேட்டு விண்ணப்பித்துள்ளார். அப்பொழுது அந்த விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டதாக பேசிய தனியார் கடன் உதவி நிறுவன ஊழியர் கடன் தொகைக்கு பிராசஸிங் ஃபீஸ் ரூ.86 ஆயிரத்து 577 செலுத்துமாறு கூறியுள்ளார்.

இதனை தனது வங்கி கணக்கில்இருந்துபிரசாந்த் தனியார் கடனுதவி வழங்கும் நிதி நிறுவன ஊழியர்கூறியவங்கிகணக்கு பரிமாற்றம் செய்துள்ளார். இருப்பினும்,கடன்தொகை தனது வங்கிக் கணக்கிற்கு வராததால் பிரசாந்த் நேற்று முன்தினம் மாலை தனியார் கடனுதவி நிறுவன ஊழியரை தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அப்பொழுது அவர் பணம்கேட்டு தொடர்ந்து தொல்லைசெய்துவந்தால் விண்ணப்பத்தில் உள்ள உனது போட்டோ மற்றும் உனது மனைவியின் போட்டோவை மார்பிங் செய்து இணையதளத்தில் தாறுமாறாக பதிவேற்றம் செய்து மானத்தை வாங்கி விடுவேன் என்று கூறி மிரட்டினாராம்.இதனால் அதிர்ந்துபோன பிரசாந்த் நேற்று முன்தினம் மாலை இது குறித்து தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் கூறி வேதனை அடைந்தாராம்.

இதனால் பிரசாந்தின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் இதுகுறித்து சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆறுதல் கூறி உள்ளனர். இந் நிலையில், நேற்று விடியற்காலை பிரசாந்தின் மனைவி தனலட்சுமி தனது வீட்டின் பின்பகுதியில் உள்ள கழிவறைக்கு சென்ற போது அங்கு பிரசாந்த் தூக்கு மாட்டிக்கொண்டு தொங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்து அலறினாராம்.இதனால் அருகில்இருந்தவர்கள் ஓடி வந்து பிரசாந்தை மீட்டு பெரியபாளையம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்து விட்டதாக கூறினார்களாம்.

இதுகுறித்துதகவலறிந்த பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் விரைந்து வந்து பிரசாந்தின் உடலை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், வழக்குப்பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். ஆன்லைன் ஆப் மூலம் லோன் கேட்டு வாலிபர் ஒருவர் பணத்தை இழந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அறந்தாங்கி அருகே அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடு இடிந்து விழுந்தது



அறந்தாங்கி, ஏப்.22-

தமிழக அரசால் 30 வருடங்களுக்கு முன்னால் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடு இடிந்து விழுந்து விபத்து அதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள விழானூர் ஊராட்சியை சேர்ந்த வெளியாத்தூரில் வசித்து வரும் கணேசன் என்பவருக்கு அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடு சுமார் 30வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது. இந்த வீட்டின் மேல் தளமும் சுற்றுச் சுவரும் திடீரென இடிந்து விழுந்தது, அதில் அதிர்ஷ்டவசமாக கணேசன் மகள் மற்றும் மகன் இருவரும் வெளியில் விளையாடிக் கொண்டிருந்ததால் எந்த ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் உயிர் தப்பினர்.

மேலும் கணேசன் மனைவி சண்முகவள்ளி இடிந்த சுவற்றின் இடிபாடுகளில் சிக்கி பலத்த காயங்களுடன் இருந்துள்ளார், அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு அவசர ஊர்தியில் ஏற்றி அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். எனவே

வீட்டினை இழந்த அவர்களுக்கு அரசு உரிய நேரத்தில் வீட்டினை கட்டிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அப்பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் கோரிக்கையாகும்.

## மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவருக்கு நட்சத்திர சாதனையாளர் விருது



சென்னை ,ஏப்.22-

சென்னையில் நடைபெற்ற ரோட்டரி சங்கங்களின் மாநாட்டில் புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதனுக்கு 'நட்சத்திர சாதனையாளர் விருது" வழங்கப்பட்டது

கல்விப் பணியில் சிறந்து விளங்கியமைக் காகவும், மாணவர்களிடையே வளர்க்கப்படும் சமூகசேவை மற்றும் அர்ப்பணிப்பை பாராட்டி இந்த விருதுவழங்கப்பட்டது. மேலும் மௌண்ட் சீயோன் பள்ளிமாணவர்கள் நீட், ஐஐடி, ஜெஇஇ போன்ற தேர்வுகளில் தேர்ச்சிபெற்று, 12வது மற்றும் 10வது வாரியத் தேர்வுகளில் அதிகமதிப் பெண்கள் பெற்று சாதனைப் படைத்துள்ளனர். மாணவர்கள் விளையாட்டு, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் பிறபாட நெறிநிகழ்ச்சிகளிலும் சிறந்துவிளங்குகின்றனர்.

அதே நேரத்தில் மாணவர்கள் சமூக பொறுப்புணர்வுடன் இருக்கபயிற்சிஅளிக்கப் படுகிறது. ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், பார்வையற்றோர் பள்ளிகள் போன்ற வற்றிற்கு சென்றும், இயற்கை பேரிடர் காலங்களில் உதவி வழங்கப்படுகிறது. பள்ளியில் பெறப்படும் இந்தப் பயிற்சி மாணவர்களை வலிமையான, உணர்த்திறன் மற்றும் செயல் ஊக்கமுள்ள தலைவர்களாக வடிவமைக்க உதவுகிறது. இந்த விருதினை அமைச்சர் கே.என்.நேரு, ரோட்டரி கவர்னர் ஜெயக்கண், வசந்தி ஜெயக்கண் மற்றும் ரோட்டரிசங்கத்தின் முன்னாள் கவர்னர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

## நடிகர் நாசருக்கு அமீரகம் அளித்த கவுரவம்




சென்னை ,ஏப்.22-

தமிழ் சினிமா உலகில் மிகப் பெரிய ஆளுமை நடிகராக கருத்தக்கூடியவர்களில் ஒருவர் நடிகர் நாசர், இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிதிரைப்படங்களில் நடித்துள்ளார்.

சமீபத்தில் அமீரகம் சென்றுள்ள நடிகர் நாசருக்கு அந்நாட்டு அரசால் வழங்கப்படும் கோல்டன் விசா வழங்கப்பட்டுள்ளது, இவ்விசா சினிமா துறை பிரபலங்கள் பலருக்கு வழங்கப்பட்டு வந்தாலும் தமிழ் திரையுலகில் வெகு சிலரே இதனை பெற்றுள்ளனர். நடிகர் நாசருக்கு இவ்விசா கிடைக்கஏற்பாடுசெய்த துபாய் வாழ் இந்திய தொழில் அதிபர் வசிம் அதானுடன் நடிகர் நாசர் கோல்டன் விசா பெறும் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

கோல்டன் விசா அளித்ததற்காக அமீரக அரசிற்கும் இதற்கு ஏற்பாடுகள் செய்த தொழில் அதிபர் வசிம் அதான் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

## திருப்பத்தூர் அருகே ஆசிரியரைத் தாக்க முயன்ற மாணவர் பள்ளியில் வருவாய் கோட்டாட்சியர் நேரில் விசாரணை



திருப்பத்தூர் ,ஏப்.22-

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியத்தில் இயங்கி வரும் அரசு மேல்நிலைப் பள்ளியில் 800-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றி வருகின்றனர். இப்பள்ளியில், தாவிரவியல் ஆசிரியராக பணியாற்றி வருபவர் சஞ்சய்காந்தி. இந்நிலையில், இரு தினங்களுக்கு முன்பு மதியம் 12-ம் வகுப்புக்கு பாடம் நடத்த சென்ற சஞ்சய்காந்தி அங்கு மாணவர்களிடம் ரெக்கார்டு நோட்டு கேட்டுள்ளார். முன் இருக்கையில் அமர்ந்திருந்த மாணவர்கள் ஒவ்வொருவராக சென்று தங்களது ரெக்கார்டு நோட்டுகளை அவரது மேஜை மீது வைத்தனர்.

அப்போது, கடைசி பென்சில் மேல் சட்டை இல்லாமல் படுத்திருந்த உடையார்பாளையம் பகுதியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தனது ரெக்கார்டு நோட்டை எடுத்து வரவில்லை எனக் கூறப்படுகிறது. இது குறித்து ஆசிரியர் சஞ்சய்காந்தி விளக்கம் கேட்டபோது, ஆவேசமடைந்த அந்த மாணவர் ஆபாசமாகப் பேசி, ஆசிரியரைத் தாக்குவதற்குப் பாய்ந்தார். இந்தச் சம்பவத்தை அங்குள்ள மாணவர் ஒருவர் தனது செல்போனில் படம் எடுத்தார். மாணவர் தாக்க வந்ததைக் கண்ட ஆசிரியர் சஞ்சய் காந்தி திடுக்கிட்டு செய்வதறியாமல் திகைத்து நின்று சற்று நேரத்தில் தன் இருக்கையில் அமர்ந்தார். இந்த வீடியோ சமூக வளைதளங்களில் நேற்று வைரல் ஆகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அமர்குஷ்வாஹா உத்தரவின் பேரில், வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி சுப்பிரமணி பள்ளிக்கு நேரில் சென்று அங்கு தலைமை ஆசிரியர் வேலனிடம் விசாரணை நடத்தினார். பிறகு, சம்பந்தப்பட்ட மாணவர் மற்றும் அவரது பாதுகாவலர் மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களை வரவழைத்து விசாரணை நடத்தினார். இதையடுத்து, வகுப்பறையில் ஆசிரியரை மிரட்டிய மாணவர் எந்தவித நிபந்தனையும் இன்றி ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தலைமையாசிரியரிடம் தெரிவித்தார். மேலும், மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதன்பிறகு, 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு கவுன்சலிங் அளிக்கப்பட்டது. இது குறித்து ஆசிரியர்கள் தரப்பில் கூறும்போது, "12-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஓரிரு நாளில் செய்முறை தேர்வு நடைபெற உள்ளது. தற்போது குற்றச்சாட்டிற்குள்ளான மாணவர் மீது நடவடிக்கை எடுத்தால், அவரது தேர்வு முடிவுகள் பாதிக்கப்படும். மேலும், அவரது எதிர்காலமும் கேள்வி குறியாகும் என்பதால் அவரை மன்னித்து, இதுபோன்ற செயல்களில் இனி ஈடுபடாமல் இருக்க அவருக்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தனர்.

தயாரிப்பு விலையில்... தங்க நகைகள்...!
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜீவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பு கூடம்
TS.NO.3208 கீழராஜ வீதி,
புதுக்கோட்டை – 1.
தொடர்புக்கு : 98433 07916, 04322 – 233544.

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
| --- | --- | --- | --- |
| விலை | 1 கிராம் | Rs.4,946 | Rs.5,345 |


## பொது அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், குப்பையன்பட்டி வருவாய் கிராமம், 136,தெற்கு தெரு,குப்பையன்பட்டி முகவரியில் வசிக்கும் ராஜரெங்க மூர்த்தி (வளர்ப்பு மகன்) என்பவரின், தந்தை **வ.சின்னையா** என்பவர் கடந்த 14.02.1993 அன்று இறந்துவிட்டார். அவரது இறப்பை பதிவு செய்யக் கோரியும், இறப்பு சான்று கேட்டும் புதுக்கோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் புதுக்கோட்டை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலரிடம் நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிவிக்கலாம் என தெரிவித்து கொள்கிறேன்.

இப்படிக்கு
ராஜரெங்க மூர்த்தி
குப்பையன்பட்டி
செல்: 9787881272

### புதுக்கோட்டையில் 27 கிராம ஊராட்சிகளிலுள்ள

## வார்டு உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் புத்தாக்க பயிற்சி



**ஆதனக்கோட்டை, ஏப்.22-**

புதுக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள 27 கிராம ஊராட்சிகளிலுள்ள வார்டு உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் புத்தாக்க பயிற்சி ஒன்றிய ஆணையர் குமாரவேலன் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை ஆயுதப்படை சமுதாய கூடத்தில் நடைபெறும் இரண்டு நாள் புத்தாக்க பயிற்சியின் முதல் நாளான நேற்று பயிற்சியில் 73 வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டம், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி மன்றத்தின் கடமைகள் மற்றும் பொறுப்பகள், கிராம ஊராட்சி மன்ற தலைவரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், ஊராட்சி மன்றத் துணைத் தலைவரின் கடமைகள், வார்டு உறுப்பினரின் கடமைகள், நிலை குழுக்கள், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை, தூய்மை பாரத இயக்கம், ஊரகப் பகுதிகளில் குடிநீர் சாலை வசதி தெருவிளக்கு கழிவுநீர் வடிகால் பராமரிப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் அறிக்கை தயாரித்தல், நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஊராட்சிகளில் ஆய்வு மற்றும் தணிக்கை மத்திய மாநில அரசுகளின் முன்னோடித் திட்டங்கள், பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை, தடைசெய்யப்பட்ட நெகிழி இல்லா கிராமம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வருவாய் இனங்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சியானது நடைபெற்றது.

புதுக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள 27 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த வார்டு உறுப்பினர்கள் பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். இந்த பயிற்சியில் பயிற்றுநர்கள் சைவராசு, வெள்ளையம்மாள் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர்.

## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, சங்கம்விடுதி வருவாய் கிராமம் சொக்கம்பேட்டை முத்தையன் மகன் பாண்டியன் கொடுக்கும் அறிவிப்பு கடந்த வருடம் 24-12-2021 அன்று கந்தர்வக்கோட்டை கடைவீதிக்கு செல்லும் போது எனது பத்திரம் தொலைந்து விட்டது இதுநாள் வரை தேடியும் கிடைக்காததால் இது சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்திரம் 11.05.2005 ஆம் ஆண்டு கந்தர்வக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு பெற்றது. ஆவண எண் 1129, பட்டா எண்: 1700,1657, புல எண்: 131 131 133 56 7 17 4 5 6 7 1 மேலும் இது சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. 20.04.2022 புகார் எண்: CAP22066580 இந்த பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு
பாண்டியன் த/பெ முத்தையன் 296/2 வடக்கு தெரு, சொக்கம்பேட்டை,
வெள்ளாளவிடுதி(அஞ்சல்), கந்தர்வக்கோட்டை (தாலுகா),
புதுக்கோட்டை (மாவட்டம்) செல்: 9080315175

## அதிமுகவை மீட்டெடுத்து சசிகலாவை பொதுச் செயலாளர் ஆக்குவோம்: டிடிவி தினகரன்




மதுரை ,ஏப்.22-

"அதிமுகவை மீட்டெடுத்து சசிகலாவை பொதுச்செயலாளர் ஆக்குவோம்" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் உறுதிபட கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த டிடிவி தினகரன் கூறியது: "திமுக ஆட்சிக்கு வந்தால் விடியல் வராது. மக்கள் ஏமாறுவர். திமுக ஆட்சி என்றாலே தமிழகத்திற்கு இருண்ட காலம் என்பது வரலாறு. திமுக ஆட்சி தவறான பாதையைநோக்கி செல்கிறது. இந்த ஆட்சி தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாமல் மாபெரும் தோல்வியை இந்த ஆட்சியாளர்கள் அரசு சந்தித்துள்ளனர். ஜெயலலிதா விரும்பி சென்று வந்த இடம் கொடநாடு. கொடநாடு கொலைவழக்கில் கொலையாளிகளை, உண்மையான குற்றவாளிகளை காவல் துறையினர் கண்டுபிடிக்க வேண்டும். தமிழக அரசு கைது செய்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

எதிர்க்கட்சி என்பதற்காக எல்லாவற்றிலும் ஆளுங்கட்சியை குறை சொல்ல வேண்டியது இல்லை. அனைத்திலும் அரசியல் செய்ய வேண்டியதில்லை. அதிமுகவை கைப்பற்றுவது என்பது யானைப்படை, குதிரைப்படையோடு சென்று கைப்பற்றுவது இல்லை. ஜனநாயக முறைப்படி தேர்தலில் வெற்றிபெற்று அதிமுகவை மீட்டெடுப்போம். கைப்பற்றுவோம் என்பது இல்லை. இழந்ததை மீட்டெடுப்போம். ஜெயலலிதா ஆட்சி நடைபெற அதிமுகவை மீட்டெடுப்போம். கடந்த காலதேர்தல்தோல்விகளை கடந்து தமிழக மக்களின் ஆதரவோடு அதிமுகவை மீட்டெடுக்கும் பணிகளை செய்கிறோம். பொதுவாக சிலர் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆளுங்கட்சியாக இல்லையென்றால்எதிராக இருப்பார்கள். அதற்கு சினிமா கலைஞர்களும் விதிவிலக்கு அல்ல. நாங்கள் ஜனநாயக ரீதியாக அதிமுகவை மீட்டெடுத்து சசிகலாவை பொதுச் செயலாளர் ஆக்குவோம். அதிமுகவை மீட்டெடுக்க தான் அமமுக. என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

## அரியலூரில் மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம்: எம்.பி திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது



அரியலூர், ஏப்.22-

அரியலூர் மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி, முன்னிலையில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டப்பணிகள் குறித்து சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர், சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆய்வு செய்து, பின்னர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து அரியலூர் மாவட்டத்தை தனியாக பிரித்து, 14 ஆண்டுகள் ஆன நிலையிலும், அரியலூர் மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட, சில துறைகள் பிரிக்கப்படாமல் உள்ளதாகவும், இதனால் நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதாகவும், இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இதன்படி தீயணைப்புத்துறை, மின்சாரத்துறை, நலப்பணிகள் இணை இயக்குநர் உள்ளிட்ட அலுவலகங்கள், பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்து செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டத்திற்கென்று இத்துறைகளுக்கு தனி அலுவலர்கள்நியமனம்செய்ய தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் சுடுகாடு இல்லை. மேலும் சுடுகாடு உள்ள கிராமங்களில் மயானப்பாதைகள் இல்லை, மேலும் வீட்டுமனைப்பட்டா கோரி ஏற்கனவே விண்ணப்பித்த மனுக்கள் நிலுவையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் கேந்த்ரிய வித்யாலயா பள்ளி அமைக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாகும். இப்பள்ளி அமைப்பதற்கு தேவையான இடம் ஒதுக்கீடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டு, இதில் உள்ள நிர்வாக சிக்கல்கள் குறித்து மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தற்போது எடுத்துரைக்கப்பட்டது. இதனை சரிசெய்து, நிலம் ஒதுக்கும் பட்சத்தில் மத்திய அரசிடம் பேசி, அரியலூர் மாவட்டத்தில் கேந்த்ரிய வித்யாலயா பள்ளி அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், அரசின் திட்டங்கள் அனைத்து பொதுமக்களையும் சென்றடையும் வகையில் அலுவலர்கள் தொடர்ந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் எனவும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பி.ரவிசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் சு.சுந்தர்ராஜன், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்திட்ட அலுவலர் சிவக்குமார், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் நகராட்சித்தலைவர் .சுமதி சிவக்குமார், குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

## மதுரை மாநகராட்சிக்கு ரூ.42 கோடி வாடகை பாக்கி 138 கடைகளுக்கு சீல் வைப்பு



மதுரை ,ஏப்.22-

மதுரையில் மாநகராட்சி கடைகளுக்கு முறையாக வாடகை செலுத்தாமல் அதன் உரிமையாளர்கள் ரூ.42 கோடி வாடகை பாக்கி வைத்திருந்த நிலையில், பாக்கியை வசூலிக்கும் வகையில் முதல்கட்டமாக 138 கடைகளுக்கு அதிகாரிகள் அதிரடியாக சீல் வைத்துள்ளனர்.

மதுரை மாநகராட்சிக்கு சொத்து வரி, காலி மனை வரி, குடிநீர் இணைப்பு வரி, பாதாள சாக்கடை இணைப்பு வரி, தொழில் வரி, குத்தகை வரி மற்றும் கடைகள் வாடகை உள்ளிட்ட பல்வேறு வருவாய்இடங்கள் மூலம் ஆண்டிற்கு ரூ.201 கோடி வருவாய் கிடைக்கிறது. அதிகப்பட்சமாக இதில் சொத்து வரி மட்டும் ரூ.97.03 கோடி வரை வருவாய் கிடைக்கும். இந்த வருவாய் இல்லாத இடங்களில் கடைகள் வாடகை முக்கியமானதாக கருதப்படுகிறது.

மாநகராட்சி சார்பில் மொத்தம் 6,285 கடைகள் ஏலம் விடப்படப்பட்டுள்ளன. வரி இல்லாத வருவாய் இடங்களான இந்தக் கடைகள் வாடகைமூலம் மட்டும் மாநகராட்சிக்கு ரூ.59 கோடியே 40 லட்சம் வருவாய் கிடைக்கிறது. தற்போது இந்த வருவாயில் ரூ.17 லட்சம் வசூலாகியிருக்கிறது. மீதி ரூ.42 கோடியே 5 லட்சம் ரூபாய் வசூலாகாமல் நிலுவையில் உள்ளது.

இந்தப் பணத்தை வசூல்செய்யமாநகராட்சி ஆணையாளர் கார்த்திகேயன், மாநகராட்சி வருவாய் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் மாநகராட்சி வருவாய் துறை அதிகாரிகள் தற்போது நீண்ட காலம் லட்சக்கணக்கில்வாடகை செலுத்தாத கடைகளுக்கு சீல் வைத்து அடைத்து வருகின்றனர். இதுவரை 138 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. கடை உரிமையாளர்கள், வாடகை பாக்கியை செலுத்தியப் பின்னர் மாநகராட்சி வருவாய் துறை அதிகாரிகள் கடைகளை திறந்து விடுகின்றனர்.

ரூ.10 லட்சம் மற்றும் அதற்கு மேல் வாடகை பாக்கி வைத்திருப்பவர்கள், மொத்தப் பணத்தையும் ஒரே நேரத்தில் செலுத்த முடியாமல்கவுன்சிலர்கள் மூலம் மாநகராட்சி அதிகாரிகளிடம்சிபாரிசு செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால், மாநராட்சி ஆணையாளர் நிலுவை கடை பாக்கியை எந்த சமரசத்திற்கு இடம் கொடுக்காமல் கறாராக வசூல் செய்ய உத்தரவிட்டார். அதனால், கவுன்சிலர்கள் சிபாரிசு இந்த விவகாரத்தில் எடுபடவில்லை. அதனால், கடை உரிமையாளர்கள் கடை பாக்கி செலுத்திய வண்ணம் உள்ளனர்.

மாநகராட்சிவருவாய் துறை அதிகாரிகள் கூறியதாவது: "தற்போது மொத்த கடைகளில் 50 சதவீதம் அவற்றை ஏலம் எடுத்த உரிமையாளர்களிடம் இல்லை. அவர்கள் உள்வாடகைக்கு மற்றவர்களுக்கு விட்டுள்ளனர். அதனால்,கடைகளைகடை உரிமையாளர்களுக்கும், தற்போது அதனை நிர்ணயிப்பவர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு நீதிமன்ற வழக்குகள் உள்ளன. இதுபோல் 2,380 கடைகள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நடக்கிறது.

ஆனால், அந்தக் கடைகளிலும் வாடகையை நிலுவையில் இல்லாமல் வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனால், இந்த நீதிமன்ற வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர முடியாத கடை உரிமையாளர்கள் வாடகை செலுத்த தயக்கம்காட்டுகின்றனர். சீல் வைத்த கடைகளுக்கு நிலுவை வாடகையை செலுத்தப்படாவிட்டால் அந்தக் கடைகளை மாநகராட்சி கைப்பற்றி மீண்டும் மறு ஏலத்திற்கு விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது" என்று அதிகாரிகள் கூறினர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# இளம் பெண்ணுக்கு உதவிய போலீசார்: பொதுமக்கள் பாராட்டு



சீர்காழி, ஏப். 22-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி மெயின் ரோட்டில் இரவு 10 மணி அளவில் 30 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவர் சந்தேகப்படும்படி நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது இரவு ரோந்துபணியில் ஈடுபட்ட சீர்காழி போலீஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் செந்தில், தனிப்பிரிவு காவலர் மூர்த்தி ஆகியோர் அந்தப் பெண்ணிடம் நேரில் சென்று விசாரணை செய்தனர். விசாரணையில் அந்தப் பெண் கடலூர் அண்ணா நகரை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது.

மேலும் இவரது பெற்றோர்கள் இறந்துவிட்டதாகவும் தற்போது அண்ணனின் பாதுகாப்பில் இருந்து வந்ததாகவும் போதிய வருமானம் இல்லாததால் வேலை தேடி கடந்த சில நாட்களுக்கு முன்பு தஞ்சாவூர் சென்றதாகவும் அங்கு இவருக்கு வேலை கிடைக்காததால் கடந்த மூன்று நாட்களாக கையில் பணம் இல்லாததால் பசியோடு நடந்தே வந்ததாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து போலீசார் அந்த பெண்ணுக்கு உணவு வழங்கி ரூ 200 கொடுத்து அவ்வழியாக வந்த கடலூர் செல்லும் அரசு பேருந்தில் ஏற்றி வைத்து அனுப்பி வைத்தனர். இளம் பெண்ணுக்கு உதவிய போலீசாரின் செயலை கண்டு அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் நெகிழ்ச்சியோடு பாராட்டினர்.

# இனி, இலவசமாக பெறலாம்.. அரசு அறிவிப்பு..!

சென்னை , ஏப்.22:

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விண்ணப்பம் 6-ஐ பூர்த்தி செய்து தேர்தல் பிரிவு அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அதிகாரிகள் பரிசீலனை செய்து, ஒப்புதல் வழங்கியதும் வண்ண வாக்காளர் அட்டையாள அட்டை வீடு தேடி விநியோகிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

அடையாள அட்டை தொலைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ பழைய கறுப்பு வெள்ளை அட்டைக்கு மாற்றாக வண்ண வாக்காளர் அட்டை பெற பொது இ-சேவை மையங்களில் ரூ.25 கட்டணம் செலுத்தி வண்ண வாக்காளர் அட்டையை அச்சிட்டு பெறும் வசதி நடைமுறையில் இருந்தது.

ஆனால், இ-சேவை மையங்களில் பிரிண்டர் பழுது உள்ளிட்ட பல காரணங்களால் கார்டு பெறுவதில் நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டது. இதனால் வாக்காளர்கள் சிரமத்திற்கு ஆளாகினர்.

இதை தவிர்க்கவும், வாக்காளர் நகல் அடையாள அட்டை பெறுவதை எளிதாக்கவும் புதிய தொழில்நுட்பத்துடன் இந்திய தேர்தல் ஆணையம் வடிவமைத்துள்ள, 'கியோஸ்க்' எனப்படும் கணிப்பொறி கருவி மாவட்ட வாரியாக வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்தில் அந்தந்த தாலுகா அலுவலகங்களில் செயல்படும் தேர்தல் பிரிவு அலுவலகங்களுக்கு சென்று விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து, தேர்தல் பிரிவு அதிகாரி ஒப்புதல் செய்த பின், கலெக்டர் அலுவலகத்தில் இயங்கும் தேர்தல் கணினி பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும். அதன் பின்னர், பதிவு செய்த செல்போன் எண்ணுக்கு வரப்பெறும் குறுஞ்செய்தி மற்றும் 'கியூ-ஆர்' குறியீட்டை பயன்படுத்தி வண்ண நகல் அடையாள அட்டையை இலவசமாக பெறலாம்.

இது குறித்து தேர்தல் பிரிவு அதிகாரி ஒருவர் கூறுகையில், 'கலெக்டர் அலுவலகங்களில் 'கியோஸ்க்' எனப்படும் கணிப்பொறி கருவி கடந்த ஒரு மாதமாக பயன்பாட்டில் உள்ளது.

இதன் மூலமாக, கார்டை தவற விட்டது, கார்டு சேதமானது உள்ளிட்ட காரணங்களை கூறி விண்ணப்பிப்பவர்களுக்கு புதியதாக வண்ண வாக்காளர் நகல் அட்டை வழங்கப்படுகிறது' என்றார்.

# வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு



தி.மலை , ஏப்.22:

திருவண்ணாமலை மாவட்டம் அடுத்த செய்யாறு தொகுதியில் வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார். செய்யாறு பகுதியில் செய்யாறு, வெம்பாக்கம், அனக்காவூர் ஆகிய ஊராட்சி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நடந்து வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் பா.முருகேஷ் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது வடதின்னலூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி உறுதி திட்டத்தில் ரூ.3 லட்சம் மதிப்பில் மூங்கில் தோப்பு வளர்ப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். சின்ன செங்காடு கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவை சாப்பிட்டு ருசித்து பார்த்து சத்துணவில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து திருப்பூண்டி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.32 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள மரக்கன்று வழங்கும் பணியை ஆய்வு செய்தார். ஆய்வின் போது கூடுதல் கலெக்டர் பிரதாப்,செய்யாறு உதவி கலெக்டர் விஜயராஜ், உதவி இயக்குனர் சுரேஷ் குமார் உள்பட பலர் உடனிருந்தனர்.



பாரதிய ஜனதா கட்சியின் ஸ்தாபன தினத்தை முன்னிட்டு பாரத பிரதமர் நரேந்திர மோடி ஜி கனவு திட்டமான தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத் தலைவர் அண்ணாமலை மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட தலைவர் ராஜகுமார் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, ஆவடி கிழக்கு மண்டல் சார்பில் கோவில்பதாகை, பூம்பொழில் நகர் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி வளாகத்தில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளரும் தூய்மை இந்தியா திட்டத்தில் மாவட்ட பொறுப்பாளருமாகிய ஆவடி லயன் டாக்டர் எஸ்.கே.எஸ். மூர்த்தி தலைமையில், ஆவடி கிழக்கு மண்டல் தலைவர் வடிவேல் முன்னிலையில், பாஜக நிர்வாகிகள், கலை மற்றும் கலாச்சார பிரிவை சார்ந்த . சங்கீதா, மாவட்ட கல்வியாளர் பிரிவு செயலாளர் . பாபு, மண்டல துணைத் தலைவர் லட்சுமி நாராயணன், பொருளாளர் துளசிதரன், மண்டல் செயலாளர் சந்தோஷ், தொழில் பிரிவு மண்டல் தலைவர் ஜெகதீஷ் சந்திரபோஸ், மண்டல் இளைஞரணி செயலாளர் யோகேஸ்வரன், மற்றும் முருகேசன் ராஜா, பிரகாஷ், சீனிவாசன், ஆவடி தெற்கு மண்டல் தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் லோக சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு தூய்மைப்படுத்தும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்



மதுரை மாவட்டத்தில் கொரோனாவால் மரணமடைந்த 2 அரசு ஊழியர் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25 லட்சம் வீதம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் அனீஷ்சேகர் காசோலையை வழங்கினார். உடன் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) சவுந்தர்யா உள்ளனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏத்தக்கோவில் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் தேர்தல்



திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அதிமுக அலுவலகத்தில் நடைபெற்றது. திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் அதிமுக தேர்தல் பொறுப்பாளர்களான மருத்துவ அணி மாநில செயலாளர் டாக்டர் பி.வேணுகோபால் Ex M.P, கழக அமைப்பு செயலாளர் திருத்தணி கோ.அரி Ex M.P, மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி.ரமணா ஆகியோர்களிடம் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் தூசி கே.மோகன் மாவட்ட செயலாளர் பதவிக்கு விண்ணப்பம் மனு அளித்தார். அருகில் முன்னாள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியம், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் அட்வகேட் ஜாகிர் உசேன், ஒன்றிய கழக செயலாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மகேந்திரன், திருமூலன் மற்றும் நகர கழக செயலாளர்கள் அசோக்குமார், வெங்கடேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# நாகூர் தர்கா தலைமை அறங்காவலராக பொறுப்பேற்ப்பு



நாகப்பட்டினம் :ஏப்.22

நாகைஅடுத்துநாகூரில் புகழ் பெற்ற தர்காவில் புதிய அரங்காவலர் பொருப்பேற்பு நிகழ்ச்சியில் பொருப்பாளர் : அல்ஹாஜ் செய்யது காமில் சாஹிப் காதிரி அவர்களை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் நாகூர் தர்கா பரம்பரை ஆதீனஸ்தரும் நாகை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துனை தலைவருமான வீ.எஸ்.ஏ தஸ்லீம் தலைமையில் சந்தித்தனர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில செயலாளரும் நாகப்பட்டினம் மாவட்ட பொறுப்பாளருமான நாச்சிக்குளம் J. தாஹிர், மருத்துவ அணி மாநில துனை தலைவர் மன்னார்குடி டாக்டர் அசோக்குமார், தமிழ்நாடு குத்தகை விவசாயிகள் சங்கத்தலைவர் வழக்கறிஞர் செருகளத்தூர் ஜெய்சங்கர், நாகை நகர்மன்ற உறுப்பினர் தியாகு, நாகை நகர தலைவர் உதயச்சந்திரன், நாகை மாவட்ட செயலாளர்கள் நிலோபர் பேகம், தெய்வானை, திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி தலைவர் தங்கராஜ், உதயகுமார் பரணிதரன் ஆகியோர் கலந்துகொண்டு தலைமை அறங்காவலர் பதவி ஏற்றதற்கு வாழ்த்து தெரிவித்தனர்



திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வருவாய் துறையின் கீழ் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையை கலெக்டர் காயத்ரி கிருஷ்ணன் வழங்கினார்.

# திருவிடைக்கழி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் பாலஸ்தாபனம் சிறப்பு யாக பூஜை – ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு





தரங்கம்பாடி, ஏப்.22:

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அருகே திருவிடைகழி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் பாலஸ்தாபனம் சிறப்பு யாக பூஜைகள் வியாழக்கிழமை நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருவிடைக்கழி என்ற ஊரில் புகழ்பெற்ற சுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. அருணகிரிநாதரால் திருப்புகழ் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் உள்ளிட்ட நூல்களில் திருவிடைகழி பற்றி பாடப்பட்டுள்ளது. சேந்தனார் பெருமானால் பாடப்பட்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய நூல்கள் இந்த ஆலயத்தில் இருந்து இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

முசுகுந்த சக்கரவர்த்தியால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆலயம், சூரபத்மனின் இரண்டாவது மகன் ஹிரண்யாசுரனை கொன்ற பாவம் நீங்க குரா மரத்தடியில் முருகப்பெருமான் சிவபூஜை செய்து பாவ விமோசனம் பெற்ற இடம் என்று தலபுராணம் கூறுகின்றது. பண்டைய தமிழ் நூல்களில் குராவடி என்ற பெயரில் வழங்கப்படும் இந்த ஆலயம், முருகனுக்கு உரிய பாவம் கழிந்ததால், திருவிடைக்கழி என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயிலில் திருவிடைக்கழி முருகன், சிவபூஜை செய்த நிலையில் பாவ விமோசன சுவாமியாக வீற்றிருக்கிறார். சூரபத்மனை முருகன் கொன்றார். சூரபத்மனின் மகனான இரண்யாசுரன், முருகனுக்கு பயந்து தரங்கம்பாடி கடலுக்குள் ஒளிந்தான். சிவபக்தனான அவனையும், பராசக்தியின் அருளால் முருகன் கொன்றார். அசுரனாக இருந்தாலும், சிவபக்தனைக் கொன்றதால் முருகனுக்கு பாவம் உண்டானது. அதைப் போக்க இங்குள்ள குராமரத்தின் அடியில் தவமிருந்தார். இதனால் 'திருக்குராவடி' என இத்தலத்திற்கு பெயர் வந்தது. முருகன் ஆறடி உயரத்தில் கிழக்கு நோக்கி நின்ற நிலையில் இருக்கிறார். சுவாமியின் வலது கை அபயம் தரும் விதத்திலும், இடதுகை தொடையில் வைத்தபடி உள்ளன. கருவறையில் ஒரு சிவலிங்கம் உட்புறத்திலும், மற்றொரு லிங்கம், முருகனின் முன்புறமும் உள்ளது.

தினமும் அர்த்தஜாம பூஜையின் போது, முருகன் பூஜித்த பத்ரலிங்கத்திற்கு முதலில் பூஜை நடக்கும். குராமரத்தின் அடியில் தியானம் செய்ய மனத்தெளிவு, அறிவுக்கூர்மை உண்டாகும். சரவண தீர்த்தம், கங்கை கிணறு என இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. ஏழுநிலைகளுடன் கூடிய ராஜகோபுரம் உள்ளது. இக்கோவிலில் வந்து தரிசித்தால் திருமணத் தடைகள் மற்றும் பாவங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

ஆடி தை மாதங்களில் இந்த ஆலயத்திற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக வருவது வழக்கம். தமிழகத்தின் புகழ்பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்று 19 ஆண்டுகள் கடந்த நிலையில் நிகழாண்டு கோயில் கும்பாபிஷேகம் ஆவணி மாதம் நடைபெற உள்ளதால் பாலஸ்தாபனம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நந்தகுமார், ராஜேஷ் உள்ளிட்ட குருக்கள் கலந்துகொண்டு முருகப்பெருமான் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு வாசனை திரவியங்கள், மற்றும் பால், சந்தனம், இளநீர், பன்னீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு பல வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு யாக பூஜைகள் நடைபெற்றது.

இதில் பரம்பரை அறங்காவலர் ஜெயராமன், செயல் அலுவலர் ரம்யா, ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா நாகராஜன், மற்றும் கிராம வாசிகள், கோவில் பணியாளர்கள், பக்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# கோடநாடு விசாரணை சசிகலாவிடம் சிறப்பாக நடந்தது

# தமிழகத்தில் நான்கு இடங்களில் ஒலிம்பிக் அகாடமி





# புதுக்கோட்டைக்கு மதிமுக தமிழக அரசிடம் கோரிக்கை

சென்னை / புதுக்கோட்டை | 22.04.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

22.04.2022 வெள்ளி

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**அ. இராகவன்** , தமிழக நுண்கலை ஆய்வாளர், எழுத்தாளர் (பி, 1902) (இ. 1981)



**கோபாலகிருஷ்ண காந்தி** , மேற்கு வங்கத்தின் 22வது ஆளுநர் (பி, 1945)



**சுப. வீரபாண்டியன்** , தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர், தமிழறிஞர் (பி, 1952)



## இன்றைய நினைவு நாள்

**கந்தர்வன்** , தமிழக எழுத்தாளர், கவிஞர், தொழிற்சங்கவாதி (பி, 1944) (இ. 2004)



**சாமிக்கண்ணு வின்சென்ட்** , தமிழகத் திரைப்பட வெளியீட்டாளர், தொழிலதிபர் (பி, 1883) (இ. 1942)



**லால்குடி ஜெயராமன்** , தமிழக வயலின் இசைக்கலைஞர் (பி, 1930) (இ. 2013)



# புவி நாள்

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

## கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

## மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

**தொடர்புக்கு: 04322 261577**

**சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்**